**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:** 103 **நாள்:** 21.07.2018

**பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பாக, தமிழ் வாசிப்பு திறனில் ஏற்படும் சிக்கல்களும், தீர்வுகளும் என்ற தலைப்பில் அனைத்து சென்னை தொடக்க/நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழ் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையானது பல்வேறு மாணவர் நலன் சார்ந்த நலத்திட்டங்களை உருவாக்கி அதை செவ்வனே திட்டமிட்டு செயல்படுத்தி வருகின்றது. அதன் வரிசையில் இக்கல்வியாண்டில் (2018-19) குறிப்பாக ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு தமிழ் கற்றலை இனிமையுடன் கற்கும்பொருட்டு, "தமிழ் வாசிப்பு திறனில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்" என்ற தலைப்பில் அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மண்டலம் வாரியாக பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டு 03.07.2018 முதல் 06.08.2018 வரை இடைவெளிவிட்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி வகுப்பானது, பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றும் 21 ஆண்டுகள் அனுபவமிக்க இடைநிலை ஆசிரியரான டாக்டர் கனகலட்சுமி அவர்களால் நடத்தப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "தமிழ் வாசிப்பு திறனில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்" என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரையினை ஒப்படைப்பு செய்துள்ளார்.

மேலும், இவர் திருவண்ணாமலை மாவட்டம் முழுமையும் 2198 பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து, கடந்த ஏப்ரல் 19ம் நாள் உலக சாதனைக்காக 1,56,170 குழந்தைகளை ஒரே நேரத்தில் செய்தித்தாள்களை வாசிக்கவும், எழுதவும் செய்துள்ளார். அன்னாரை கருத்தாளர் (Resource person) ஆக தேர்வு செய்து இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியானது, பெருநகர சென்னை மாநகராட்சி கீழ் செயல்பட்டு வரும் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மிகுந்த ஆக்கமும், ஊக்கமும் அளிப்பது மட்டுமின்றி, கற்கும் மாணவ/மாணவியர்கள் தமிழை எளிமையாக கற்பது மட்டுமின்றி, தமிழ் வாசிப்புத் திறனும் மேம்படும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**